முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1549

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**26.12.2023,** செவ்வாய்கிழமை

1. ஞான ஜோதிகண்ட அரங்கா
ஞானிகளை கலியுகம் எங்கும் உருவாக்க
ஞானம் அருளி ஞான சபை படைத்து
ஞான யுகம் உருவாக்க வந்த குருராஜா
2. அரசனே அரங்கனே உந்தனுக்கு
அருளுவேன் சுப்ரமணியர் யானும் ஞான அறிவுரை ஆசி
(சோபகிருது வருடம் மார்கழி மாதம் 10 ம் நாள், 26.12.2023, செவ்வாய்கிழமை)
வரமென அரங்கனுள் யானிருந்து
வையகத்தை வழி நடத்தி வர
3. வருகவே கலியுக மக்கள் வணங்கி
அரங்கன் குடில் நோக்கி
நோக்கி வந்து அரங்கா முருகா என
நிலவுலகில் நாம ஜெபம் செய்துகொண்டு
4. வரமாக அரங்கன் தருகின்ற
வல்லமைமிக்க மகாமந்திர தீட்சை ஏற்று
தீட்சை ஏற்று அரங்கன் தர்ம வழி
தொடர்ந்து வந்தால் போதும் இந்த கலியுகத்தில்
5. மாட்சிமைபட எல்லோர்க்கும் ஞானபலம்
மகான்களாகும் வண்ணம் ஆற்றல் கூடி
தட்டாது கலியுகத்தை மாற்றுகின்ற
தனிப்பெரும் ஞான யுக சக்திபலம்
6. வாட்டமற அரங்கனால் கிட்டி
வையகத்தில் வடிவேலன் என் காட்சி யாவர்க்கும் கிட்டும்
கிட்டவே அரங்கனைத் தொடர்ந்து
குவலயத்தில் வரும் மக்களுக்கு

7. தட்டாது கலியினில் ஞானவான் என்கின்ற
தனிப்பெரும் சக்தி பலம் கூடிகூடி
கூடியே உலகோர் அரங்கன் தேடும்
குறையிலா ஞானிகளாக ஆற்றல் கூடி

8. தேடி வரும் அரங்கன்
தொடர்பு வழி தெரிவிப்பேன்
கலியுகத்தை மாற்றும் தெய்வீக
ஞான ஆட்சிக் காலத்தை

9. காலமதை அரங்கன் சக்தி வழி
உலகோர் அமைத்து இனிதே உலகமாற்றம்
வரமென என்னருளால் அடைவர்
வழங்கிய ஞான அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—